79

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8074775

C

1. District : மாவட்டம் *Thanjavur* PS: காவல்நிலையம் *V&AC* Year: ஆண்டு *2021* FIR No.: மு.த.அ. எண் *10/2021* Date: நாள் *11.10.2021*

2. (i) Act சட்டம்: *Prevention of Corruption* Sections பிரிவுகள்: *7 of Prevention of*
   (ii) Act சட்டம்: *Act, 1988 (as amended* Sections பிரிவுகள்: *Corruption Act, 1988*
   (iii) Act சட்டம்: *in 2018)* Sections பிரிவுகள்: *(as amended in 2018*
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் *01.10.2021* Date to : நாள் வரை *8.10.2021*
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை *12.00 hrs*
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் *11.10.2021* Time : நேரம் *12.00 hrs*
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் *FIR registered on 11.10.2021 at 13.00 hrs*

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ *Written*

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் *9 km North East*
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி *Block Development Office, Thanjavur*
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் *-*

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் *S. Anandan* (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் *S. Sundar*
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு *30/2021* (d) Nationality : நாட்டினம் *Indian* (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் *Marine Engr.* (g) Address : முகவரி *8/20, Raja Rajan Nagar 3rd St., Nanjikkottai Rd., Thanjavur 613 001.*

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   *திரு. கிருஷ்ணன், மேனேஜர்,*
   *B.D.O. அலுவலகம், தஞ்சாவூர்.*

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   *சரியான நேரம்.*

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

பணிந்து அனுப்பப்பட்டது

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 11.10.2021ம் தேதி மதியம் 12.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டைரோடு, 8/20, ராஜராஜன் நகர், 3-வது தெருவைச் சேர்ந்த S.ஆனந்தன், த/பெ.S.சுந்தர் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர் S.ஆனந்தன், வயது 32, த/பெ S. சுந்தர், 8/20, ராஜராஜன் நகர், 3-வது தெரு, நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்-6, பெறுநர்: காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, தஞ்சாவூர். அய்யா, நான் தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை ரோடு ராஜராஜன் நகரில் எனது அப்பா, அம்மாவுடன் வசித்து வருகிறேன். எனது தந்தை துபாயில் வேலை செய்துவிட்டு தற்போது எங்களுடன் இருந்து வருகிறார். நான் BE Marine Engineering வரை படித்துவிட்டு சிங்கப்பூரில் உள்ள ஒரு Shipping Company-ல்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P. Padmavathi Rank Insp. of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS VXAC, Thanjavur on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

. FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Adhnan 11/10/2021
S. ANANDAN

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

P. Padmavathi

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11. 10. 2021, 16.15 hrs.

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Insp. of Police ... No. எண் ........
VXAC, Thanjavur.

Trainee Marine Engineer-ஆக வேலை செய்துவிட்டு தற்போது எனது அப்பா, அம்மாவுடன் வீட்டில் இருக்கிறேன். தஞ்சாவூரில் கடந்த 2005-ல் வாங்கிய காலிமனைகள் தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை கிராமம், புல எண்.500 / 1-ல் அமைந்த அரவிந்தர் நகரில் மனை எண்கள் 4, 5 மற்றும் 6 உள்ளது. அதில் மனை எண்.4 எனது பெயரிலும், மனை எண்கள் 5 மற்றும் 6 எனது அம்மா சாந்தி பெயரிலும் உள்ளது. மேற்படி மனைகளை வரன்முறைபடுத்தி தருமாறு மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூரில் 2021ம் வருடம் ஜுன் மாதம் மனு கொடுத்தேன். அதற்கு நிபந்தனைக்ளுக்குட்பட்டு, உள்ளாட்சி அளவிலேயே அனுமதி வழங்க மனை பிரிவிற்கு SPF No.146 / 2021 என எண்ணிடப்பட்டு கடந்த 22.07.2021ந் தேதி ந.க.எண்.3554 / 2021 /தமா-3 என்று ஒரு உத்தரவு கொடுத்தார்கள். அதை வைத்து நான் தஞ்சாவூர் BDO அலுவலகம் சென்று எங்களுக்குரிய மூன்று காலிமனைகளையும் வரன்முறைபடுத்த ஆவணம் செய்துதருமாறு மனு எழுதி 26.07.2021ந் தேதியிட்டு மேனேஜர் கந்தசாமியிடம் கொடுத்தபோது, அவர் அதை வாங்கி கிளார்க் ரமேஷ் என்பவரிடம் கொடுத்தார். நான் அவரிடம் எப்போது வரவேண்டும் என்று கேட்டதற்கு, 10 நாட்களுக்கு பிறகு வந்து பாருங்கள் என்று சொன்னார். அதன்படி ஆகஸ்ட் 5ந் தேதி BDO ஆபிஸ் சென்று மேனேஜர் கந்தசாமியை பார்த்து நான் கொடுத்த மனு சம்மந்தமாக கேட்டபோது என்னிடம் ஒரு மனைக்கு ரூ.3,000/-வீதம் 3 மனைக்கு ரூ.9,000/- செலவாகும் என்று சொன்னார். அதன்பிறகு சார் நான் மனைகளை வரன்முறை படுத்துவதற்கு எவ்வளவு பணம் கட்டவேண்டும் என்று விபரம் கூறுமாறு கேட்டதற்கு நீ ரூ.9,000/- பணத்துடன் வா, அப்போது பணம் கட்டுவதற்குரிய செலான் தருகிறேன் என்று மேனேஜர் கந்தசாமி சொன்னார். அதன்பிறகு, 10 நாட்களுக்கு ஒரு முறை BDO அலுவலகம் சென்று நேரிடையாக மேனேஜரிடம் கேட்டும் எனக்கு பணம் கட்டுவதற்குரிய செலான் தரவில்லை. கள ஆய்வு செய்வதற்கும் வரவில்லை. அதன்பிறகு, நான் நேரிடையாக BDO அறிவானந்தம் என்பரை பார்த்து என்னுடைய மனையை Inspection பார்க்க எப்போது வருவீர்கள் சார் என்றும், நான் இங்கு விண்ணப்பம் கொடுத்து சுமார் இரண்டு மாதத்திற்கு மேல் ஆகிறது என்றும் சொன்னேன். அதற்கு அவர் மனையை ஆய்வுசெய்ய சனி,

ஞாயிறு தான் நாங்கள் வருவோம் என்று சொல்லி என்னை மேனேஜரை போய் பார்த்துச் சொல்லிவிட்டு போகச்சொன்னார். அதன்படி நான், மேனேஜரைப் பார்த்து சொன்ன பிறகு சித்ரா என்பவர் உங்கள் மனைகளை ஆய்வு செய்ய வருவார் என்று கூறி அவரது கைபேசி எண்ணை என்னிடம் கொடுத்து பேசிக்கொள்ளச் சொன்னார். நான் உடனே அவரைப்பார்த்து என்னுடைய மனுப்பற்றிச் சொல்லி எனது கைபேசி எண்ணை அவரிடம் கொடுத்தேன். அவர் மறுநாளே என்னை தொடர்பு கொண்டு 28.09.2021 அன்று Zonal Deputy சித்ரா என்பவர் வந்து எங்களுடைய மனைகளை Inspection செய்தார். அப்போது அவர் நீங்கள் வரும் வியாழக்கிழமை போய் மேனேஜரை பாருங்கள் என்றார். அதன்படி 30.09.2021ந் தேதி (வியாழக்கிழமை) நான் போய் மேனேஜர் கந்தசாமியை பார்த்தேன். அப்போது அவர் உன்னுடைய பைல் மிஸ்சாகிவிட்டது. எனக்கு உன்னிடம் உள்ளவற்றை ஒரு நகல் எடுத்துக்கொண்டுவந்து தருமாறு கூறினார். அதன்படி நானும் 01.10.2021ந் தேதி அனைத்து நகல்களையும் எடுத்துக்கொண்டுபோய் கொடுத்தேன். அதை வாங்கிக்கொண்டு அவர் ரூ.9,000/-ம் பணம் கொடுத்தால்தான் வரன்முறைக் கட்டணம் செலுத்துவதற்கான செலான் போட்டுக் கொடுப்பேன் என்று சொல்லிவிட்டார். அதன்பிறகு 08.10.2021ந் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு மீண்டும் நான் தஞ்சாவூர் BDO ஆபிஸ் போய், மேனேஜர் கந்தசாமியை பார்த்து என்னுடைய மனு சம்மந்தமாக கேட்டபோது, உங்கள் மனு மீது வேலை முடியும் தருவாயில் உள்ளது நீங்கள் ரூ.9,000/-த்தை கொடுத்துவிட்டு ஆர்டர் காப்பியை வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார். அதற்கு நான் சரி சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு DTCP Approval-க்காக கட்டவேண்டிய தொகைக்கு கொடுக்கவேண்டிய ஆர்டருக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லை. அதனால் என்னிடம் ரூ.9000/- லஞ்சமாக கேட்ட தஞ்சாவூர் BDO அலுவலக Manager திரு.கந்தசாமி மீது தக்கநடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் மனைகளுக்குரிய வரைபடம், பத்திரநகல், மூலப்பத்திரம், EC மற்றும் பட்டா ஆகியவற்றை மேல்நடவடிக்கைக்காக இணைத்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்) S. ஆனந்தன், 11.10.2021, Sir, I have received the complaint on 11.10.2021 at 12.00 hrs and verified the

genuineness of the complaint and antecedent of the accused officer and registered a case in Thanjavur V&AC Cr.No.10 / 2021 U/s 7 of Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) against the accused officer on 11.10.2021 at 13.00 hrs.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

P. PADMAVATHI
Insp. of Police,
V&AC, Thanjavur.